உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# இருபத்து நான்கு மூப்பர்கள்

## பாடம் - 27



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 27

## இருபத்து நான்கு மூப்பர்கள்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் வெளிப்படுத்தின புத்தகத்தில் காணப்படும் ஒரு காரியத்தை தியானிக்க இருக்கிறோம்.

ஆம், அது இருபத்துநான்கு மூப்பர்கள் பற்றினதாகும்.

அவர்களை குறித்து நாம் வாசிக்கையில்,

### வெளிப்படுத்தல் 4 : 4

**"அந்தச் சிங்காசானத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன, இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வலஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன் முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன்."**



## இந்த வசனம் எதை குறிக்கிறது ?

**இந்த "இருபத்துநான்கு மூப்பர்களும்" யாரை குறிக்கிறார்கள் ?**
**அவர்கள் சிங்காசனத்தை சுற்றி அமர்ந்திருப்பதின் காரணம் என்ன ?**

முதலில் வெளிப்படுத்தின புத்தகமானது எளிமையான நடையில் எழுதப்படவில்லை என்பதை நாம் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும். இதை குறித்து வெளிப்படுத்தல் 1 : 1-ல் வாசிக்கிறோம்,

**"...இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு (அடையாளத்தின் மூலம்** – KJV**) வெளிப்படுத்தினதுமான விசேஷம்..."**

ஆம், இது "அடையாளங்கள்" நிறைந்து காணப்படுகிற, அடையாள பாஷையில் எழுதப்பட்டுள்ள புத்தகமாகும்.

இதை தவிர, ஏற்கனவே நாம் நான்காம் அதிகாரத்தில் உள்ள **6 மற்றும் 7-ஆம் வசனங்களில்,** பரலோக பிதா மற்றும் அவருடைய தெய்வீக குணலட்சணங்களை குறித்து அடையாளமாக குறிப்பிடப்பட்டிருந்தவைகளை வாசித்தறிந்தோம்.



**அவைகள் அனைத்தும் அடையாள பாஷையில் காணப்பட்டது. அதுபோல, 4-ஆம் வசனத்தின் "இருபத்துநான்கு மூப்பர்களும்" அடையாள பாஷையிலேயே கூறப்பட்டு இருக்கவேண்டும்.**

இது புரிந்திருக்க, இவைகள் எதை அடையாளப்படுத்துகிறது என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. அதை, பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களை ஆராய்ந்து அறியலாம்.

இங்கு **"மூப்பர்கள்"** தேவனுடைய **"சிங்காசனத்தை சுற்றி"** அமர்ந்திருப்பதை காண்கிறோம்.

**இது வசனம் 6-ல் "நான்கு ஜீவன்கள்" சிங்காசனத்தை சுற்றி இருப்பதை போல காணப்படுகிறது.**

அந்த நான்கு "ஜீவன்களும்" தேவனுடைய நான்கு தெய்வீக குணலட்சணங்களை குறித்தது போல, "மூப்பர்கள்" பற்றின இந்த அடையாளமும், தேவனோடு தொடர்புடைய சிலவற்றை பொருளாக கொண்டிருக்க வேண்டும்.

இந்த "இருபத்துநான்கு மூப்பர்களும்" கூட தேவனை பற்றின ஏதோ ஒன்றை குறிக்கவேண்டும்.

இது ஒரு அடையாளமாக இருப்பதை அறிந்த பிறகு, "மூப்பர்" என்ற வார்த்தைக்கு – **வயதான** அல்லது **தன்னுடைய துவக்கத்தை அநேக வருடங்களுக்கு முன்பு கொண்டுள்ளவரை குறிப்பதாக இருக்கிறது.**

**இப்படிப்பட்ட துவக்கத்தை கொண்டுள்ளதாக காணப்படும் தேவனுக்குரியவைகள் எவை?**

இதற்கான பதிலை பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்,

**அப்போஸ்தலர் 3 : 21**

**"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்."**

ஆம், அது அவருடைய வார்த்தைகளே.

அவர் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலம் பேசின அவருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளே.

**பார்த்தீர்களா, இவர்களே அந்த "மூப்பர்கள்".**

இவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசின வார்த்தைகள் அல்லது

தேவனை குறித்து சாட்சி பகிர்கிறதாக தேவன் பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கதரிசிகள் மூலம் பேசினவைகள்.

இந்த வார்த்தைகள் உலக தோற்றத்திற்கு முன்பு – வெகு காலத்திற்கு முன்பு அவைகளின் துவக்கத்தை கொண்டுள்ளது. உண்மையில்….. **"மூப்பர்கள்"** என்ற வார்த்தை பொருத்தமான வார்த்தையாக இருக்கிறது.

**இப்பொழுது, இருபத்துநான்கு மூப்பர்கள் இருப்பதாக வாசிப்பது ஏன் ?**

அது ஏனென்றால், இந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுடைய எண்ணிக்கை 24 ஆக இருப்பதாகும். இவர்களுடைய "வாயின்" மூலமாக அல்லது இவர்களை பாத்திரமாக பயன்படுத்தி தேவன் இந்த "வார்த்தைகளை" பேசினார்.





**முற்காலத்தில் துவக்கத்தை உடைய தேவனுடைய இந்த "வார்த்தைகளே" மூப்பர்கள் ஆகும்.**

இங்கு, "மூப்பர்கள்" என்பது தீர்க்கதரிசிகளை குறிக்காமல் தீர்க்கதரிசனங்களை குறிப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இந்த தெய்வீக வெளிப்பாடாகிய தேவனுடைய "வார்த்தைகள்" அல்லது தீர்க்கதரிசனங்கள் எவற்றோடு தொடர்புடையவைகளாய் இருக்கின்றன ?
என்று ஒருவர் கேட்கலாம்.

இதற்கான பதில் இந்த **“மூப்பர்கள்” சிங்காசனத்தை சுற்றி அமர்ந்திருப்பதில்** காணப்படுகிறது.



**இந்த “வார்த்தைகள்” தேவனுடைய பிரதான வாக்குத்தத்தமாகிய, உலகத்தின் இரட்சிப்பு மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் அதற்கான ஆசீர்வாதங்களையும் குறிக்கும்.**

ஆம், இவை இராஜ்யத்தின் சுவிசேஷமாகும்.

இந்த தீர்க்கதரிசனங்களே மனுக்குலத்திற்காக தேவன் ஏற்படுத்தியிருக்கும் மாபெரும் தெய்வீக திட்டத்தை உத்தரவாதமளிக்கும் தீர்க்கதரிசனங்களாகும்.

இந்த இருபத்துநான்கு மூப்பர்களை நாம் “சந்திக்கும்” முன்பு விவரிக்கப்பட்டிருக்கிற அடையாளங்களை காணலாம்.



இங்கு, **வார்த்தைகள்** எப்படி **“சிங்காசனங்களின் மேல் அமர்ந்திருப்பதாகவும்”**, தங்களுடைய தலைகளில் **“பொற்கிரீடம்”** அணிந்திருப்பதாகவும், அடையாளப்படுத்த முடியும் என்று நீங்கள் ஆச்சர்யப்படலாம்.

**இது கிட்டத்தட்ட சாத்தியப்படாத ஒன்றாக தோன்றுகிறது.**

ஆனால், ஒவ்வொன்றாக இப்பொழுது நாம் காண்போம்.

 **“சிங்காசனங்கள்”**

இது தீர்க்கதரிசன வார்த்தைகள் பெற்றிருக்கும் **தெய்வீக அதிகாரத்தை** அடையாளப்படுத்துகிறது. **(வெளிப்படுத்தல் 5 : 13)**

### “வெண் வஸ்திரம் தரித்து”

இந்த வார்த்தைகள் தேவன் பேசின அவருடைய வார்த்தைகளாக இருப்பதினால், இது இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் பெற்றிருக்கும் **பரிசுத்தத்தை** அடையாளப்படுத்துகிறது.

### “உட்காரந்திருக்கக்கண்டேன்”

இது, இந்த தீர்க்கதரிசனங்கள் **நிறைவேற காத்திருக்கும் நிலையில்** இருப்பதை குறிக்கிறது.

### “தங்கள் சிரசுகளில் பொன்முடி”

இது, இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் பொழுது வெளிப்படும் **தெய்வீக மகிமையை** குறிக்கிறது.

### “சிங்காசனத்தை சூழ”

இது, இந்த தீர்க்கதரிசனங்களின் **தெய்வீக துவக்கத்தை** குறிக்கிறது. மேலும், இந்த சாட்சிகளை குறித்து தேவன் எப்பொழுதும் நினைவுள்ளவராகவும் இவைகள் ஏற்ற சமயத்தில் **நிச்சயமாக நிறைவேற்றப்படும்** என்பதையும் குறிக்கிறது.

ஆம், தேவனுடைய வார்த்தைகளும் அவர் பயன்படுத்தும் அடையாளங்களும் எவ்வளவு அருமையானதாக இருக்கிறது.

இப்பொழுது நாம் இந்த இருபத்துநான்கு மூப்பர்களை சந்திக்கலாம்..

## மூப்பர் – 1



இந்த மூப்பரை குறித்து வாசிக்கையில்,

### யூதா 14, 15

**“ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து, இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக்**

**கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக்கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்."**



ஆம், இது "மூப்பர்களில்" முதலாவதும் வயதானதுமாக இருந்து, முதலாம் உலக நாட்களின் ஜலப்பிரளயத்திற்கு முன் சொல்லப்பட்டதாகவும் இருக்கிறது.

இந்த வார்த்தைகள் உலகில் தோன்றின தேவனுடைய தீர்க்கதரிசிகளில் முதலானவராகிய ஏனோக்கு பேசினவைகளாகும்.

இது இவ்வுலகை நியாயம்தீர்க்க தம்முடைய சபையோடு, இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் வருவதை குறித்து சாட்சி கொடுக்கிறது.

இந்த வார்த்தைகளை தேவன் ஏனோக் மூலமாக பேசினார்.

இங்கு, பாவிகளை அழிக்க வராமல் அவர்கள் மனம்திரும்பி "சீர்பொருந்த" அவர் வருகிறார் என சொல்லப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

# மூப்பர் – 2



இவரை குறித்து நாம் பின் வரும் வசனங்களில் வாசிக்கிறோம்.

## ஆதியாகமம் 49:10

**“சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்.”**




ஆம், இந்த “மூப்பர்” அல்லது தீர்க்கதரிசனம் **“சமாதான கர்த்தர்” (ஏசாயா 9 : 6)** வருவதை குறித்து பேசுகிறது.

இந்த பட்டம் இயேசுவுக்கு உரியதும் அவருடைய அரசாட்சியை குறித்தும் பேசுகிறது. இந்த வார்த்தைகள் யாக்கோபு பேசினவைகளாகும்.

ஆம், பிரச்சனைகளினாலும், உபத்திரவங்களினாலும், சிதைந்துபோன நிலைமையில் சமாதானமின்றி இருக்கும் உலகிற்கு உண்மையும் நிரந்தரமுமான சமாதானத்தை தேவன், சமாதான கர்த்தராகிய – நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலம் வாக்களிக்கிறார்.

இது அவருடைய இரண்டாம் வருகையில் தேவனுடைய இராஜ்யத்தின்மூலம் இப்பூமியில் நிறைவேற்றுவார் என்பதை வாசிக்கிறோம்.



**"உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக"**

**(மத்தேயு 6 : 10)**

பின்பு சாத்தான் மற்றும் தீமையின் சக்திகளை கீழ்ப்படுத்தி மனுக்குலத்தை நீதியின் பாதையில் வழிநடத்துவார்.

அதற்கு பின்பு உண்மையும் நித்தியமுமான சமாதானம் உண்டாகும் என்று வாசிக்கிறோம்.

**ஏசாயா 14 : 7**

**"பூமிமுழுதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது; கெம்பீரமாய் முழங்குகிறார்கள்."**

ஆம், அப்பொழுது "சமாதான கர்த்தர்" தம்முடைய ஆசீர்வாதமான வேலையை நிறைவேற்றியிருப்பார்.

## மூப்பர் – 3



இது **மோசே** மூலமாக பேசப்பட்ட தேவனுடைய வார்த்தைகளாகும்.

**உபாகமம் 18:15,18,19**

**"உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக."**

**"உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை**

**அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்."**

மோசேயின் வார்த்தைகள் மூலமாக சொல்லப்படும் தேவனுடைய வார்த்தைகள். **"என்னை போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவேன்"** என்று வரக்கூடியவரைப் பற்றி சொல்லுகிறார்.

ஆம், இந்த "வார்த்தைகளை" மோசே மூலமாக பேசப்பட்டு, "என்னை போல்"
என்று அவர் விவரிக்கிற தீர்க்கதரிசியின் வருகையை குறித்து சாட்சி கொடுக்கிறது.

வரப்போகிற தீர்க்கதரிசியானவர்- **மத்தியஸ்தராகவும், மீட்பராகவும்-** இரு விதத்தில் **மோசேயை போல** இருப்பார்.

**வரப்போகிற தீர்க்கதரிசியானவர், மகிமையடைந்த சபையாகிய சரீரத்துடன் வரப்போகிற கிறிஸ்துவை பற்றி தீர்க்கதரிசி மோசே குறிப்பிடுகிறார்.**



மோசே தேவனுக்கும், இஸ்ரயேல் ஜனத்திற்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்தது போல கிறிஸ்துவும், தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையில் அதை காட்டிலும் **பெரிய மத்தியஸ்தராக** இருப்பார். **(1 தீமோத்தேயு 2 : 5)**

மோசே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேலை அழைத்து வந்த மீட்பராக இருப்பது போல, கிறிஸ்துவும் மனுக்குலத்தை பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் **பெரிய மீட்பராக இருப்பார்.**

## மூப்பர் – 4



தேவனுடைய இந்த "வார்த்தைகள்" தீர்க்கதரிசி **நாத்தான்** மூலம் பேசினவைகளாகும்.

### 11 சாமுவேல் 7 : 13

**"அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான், அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்"**

இந்த வார்த்தைகள் தேவனுடைய "வீடு" எனப்படும் – இயேசு கிறிஸ்துவின் சபை கட்டப்படுவதை பற்றி நாத்தான் பேசினவைகளாகும். அநேக யூதர்கள் இந்த தீர்க்கத்தரிசன வார்த்தைகள் சொல்லர்த்தமான கற்களை கொண்டு கட்டப்படும் தேவனுடைய "வீட்டை" குறிப்பதாக நம்பினார்.

**இவ்விதமாக, எருசலேமில் மாபெரும் ஆலயம் கட்டப்பட்டது.**

ஆனால், அது இடிக்கப்பட்டது, தேவன் குறிப்பிட்ட ஆலயம் இது அல்ல என்பது தெளிவாகிறது. தேவன் பேசின "வீடு" இன்றும் கட்டப்பட்டுவருகிறது என்பதை பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

### 1 தீமோத்தேயு 3 : 15

**"தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன், அந்த வீடு**

**ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்குத்தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.”**




ஆம், உண்மையில், “தேவனுடைய வீடு” என்பது “ஜீவனுள்ள கற்களை”. கொண்டு கட்டப்படும் இயேசு கிறிஸ்துவின் சபை என பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**1 பேதுரு 2 : 5**

**“ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.”**



## மூப்பர் – 5

தேவனுடைய இந்த “வார்த்தைகள்” தீர்க்கதரிசி **யோபு** மூலம் பேசப்பட்டவைகளாகும்

## யோபு 19 : 25, 26

**"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்."**



ஆம், இந்த வார்த்தைகள் மரித்தோரின் "பூமிக்குரிய" உயிர்த்தெழுதலாகிய – **"என் சொந்த கண்களே காணும்"** – **(யோபு 19 : 27)**

என்கிறபடி அதே சரீரம் மற்றும் மன நிலையில் உயிர்த்தெழுந்து வருவதை குறித்து யோபு பேசினவைகளாகும்.

ஆம், எல்லோரும் தங்களை அடையாளம் கண்டு கொள்வது அனைவருக்கும் ஒரு "ஆச்சரியமாக" இருக்கும் என்று இயேசு கூறுகிறார்

## யோவான் 5 : 28

**"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம், ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்."**

ஆம், உயிர்த்தெழுதலின் நாளானது அனைவருக்கும் ஓர் ஆச்சரியமானதாக இருக்கும்.



# மூப்பர் – 6



தேவனுடைய இந்த “வார்த்தைகள்” **தாவீதின்** மூலம் பேசினவைகளாகும்.

**சங்கீதம் 30 : 5**

**“அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.”**

இந்த வார்த்தைகள் தேவனுடைய தெய்வீக திட்டத்தில் அழுகை தங்குகிற “சாயங்காலம்” அதை தொடர்ந்து வரும் களிப்புண்டாக்கும் விடியற்காலம் – தேவனுடைய இராஜ்யத்தில், அதனுடைய ஆசீர்வாதங்களாகிய ஜீவன் மற்றும் இளைப்பாறுதலின் காலங்கள் (அப்போஸ்தலர் 3 : 21) மூலம் வெளிப்படும் தேவனுடைய இரக்கம் மற்றும் அன்பை குறித்து தாவீது பேசினவைகளாகும்.

**ஆம், இந்த வசனமானது, பூமியை புதுபிப்பது, சீர் பொருந்தப்பண்ணி மனுக்குலம் அனைத்தையும், ஜீவனுக்கு கொண்டு வருவதை பற்றி பேசுகிறது.**



# மூப்பர் – 7



தேவனுடைய இந்த “வார்த்தைகள்” தீர்க்கதரிசியாகிய **சாலோமோன்** மூலமாக பேசப்பட்டவைகளாகும்.

**நீதிமொழிகள் 8:22 – 30**

**“கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத்தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். ஆழங்களும், ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜெநிப்பிக்கப்பட்டேன். மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும், அவர் பூமியையும் அதின் வெளிகளையும் பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்குமுன்னும் நான் ஜெநிப்பிக்கப்பட்டேன். அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன், அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும், உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்து வைக்கையிலும், சமுத்திர ஜலம் தன் கரையைவிட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும், நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன், நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்.”**

இந்த வார்த்தைகளானது ஞானத்தின் **“பிறப்பு** அல்லது **துவக்கத்தை”** குறித்து சாலோமோன் பேசின வார்த்தைகளாகும்.

இங்கு “ஞானம்” என்பது, தேவன் துவக்கமில்லாதவராக இருப்பதினால் அவருடைய குணலட்சணங்களில் ஒன்றாக இருக்க முடியாது, ஏனென்றால், இங்கு “ஞானம்” ஒரு துவக்கத்தை பெற்றுள்ளது.

**இந்த “ஞானம்” எதை அல்லது யாரை குறிக்கிறது ?**

இதற்கான பதிலை நாம் வாசிக்கையில்,

## 1 கொரிந்தியர் 1:31

**“அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.”**

ஆம், தேவனுடைய ஞானமானது இயேசுவினிடத்தில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது.



மேலும், பின் வரும் வசனங்களில் அவருடைய துவக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**(வெளிப்படுத்தல் 3 : 14 / கொலோசெயர் 1 : 15)**

இவர் தேவனுடைய முதல் சிருஷ்டியாக தேவனோடு விசேஷித்த உறவை கொண்டுள்ளார்.

ஆம், இயேசுவின் ஞானம், மற்றும் “ஒரே பேரான குமாரனாக” மற்றும் “சகலத்தையும் சிருஷ்டித்த உடன் – சிருஷ்டிகராகவும் தேவனோடு இயேசு கொண்டிருக்கும் விசேஷ உறவானது இவ்வுலகத்திற்கும் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு ஒரு இரகசியமாக இருக்கிறது.



# மூப்பர் – 8

இந்த “வார்த்தைகள்” தேவன் தீர்க்கதரிசி **ஏசாயா** மூலம் பேசினவைகளாகும்.

**ஏசாயா 35:8 – 10**

**“அங்கு பெரும்பாதையான வழியும் இருக்கும் இது பரிசுத்த வழி என்னப்படும், தீட்டுள்ளவன் அதில் நடந்துவருவதில்லை, அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை, அங்கே காணப்படவுமாட்டாது, மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள் சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.”**

**ஆம், இது முற்றிலும் பெரும் பாதையான வழியை பற்றினதாகும்.**



முழு மனுக்குலத்திற்கும் தேவன் ஏற்படுத்தின திட்டத்தை அறியாமல் வாழ்ந்து மரித்த ஜனங்கள், அதை தேவனுடைய வார்த்தையின் மூலம் அறிந்து கொள்ளும்பொழுது மிகவும் ஆச்சர்யப்படுவார்.

இந்த இரட்சிப்பு சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்தவர்களின் இரட்சிப்பை தொடர்ந்து நிறைவேறும் என்று நாம் வாசிக்கிறோம்.

### ஏசாயா 11:10, 11

**“அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள் அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும். அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும் எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும் சமுத்திரத் தீவுகளிலும் தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத்திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி...”**

ஆம், இது மனுக்குலத்திற்கான **இரண்டாவது இரட்சிப்பாகும்.**

## மூப்பர் – 9



இந்த “வார்த்தைகள்” தேவன் தீர்க்கதரிசி **எரேமியா** மூலம் பேசினவைகளாகும்

### எரெமியா 31:29 - 30

**“பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான். எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.”**


இந்த வார்த்தைகள் தனிப்பட்ட நியாயத்தீர்ப்பு மற்றும் தேவனுடைய இராஜ்யமாகிய ஆயிரவருட அரசாட்சியில், நித்திய ஜீவனுக்காக பெறப்படும் வாய்ப்பை குறித்து தீர்க்கதரிசி எரேமியா மூலம் பேசப்பட்டவைகளாகும். இது தற்போதைய மரண சாப நிலையிலிருந்து வேறுப்பட்டதாகும்.

ஆம், இவ்வசனம் தேவனுடைய தெய்வீக திட்டத்தில் மனுக்குலம் பெறும் இரண்டு முரண்பட்ட வாழ்வியல் அனுபவத்தை குறித்து பேசுகிறது.

**“பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின”**

இது ஆதாமின் மூலம் வந்த மரண தண்டனையை அனைவரும் சுதந்தரிக்கும் கால கட்டத்தை குறிப்பதாக வசனத்தில் வாசிக்கிறோம்

**“ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.”**
**(1 கொரிந்தியர் 15 : 22)**



அதை தொடர்ந்து இரண்டாவது முறையாக ஜீவிக்கும் அனுபவம் வருவதை வாசிக்கிறோம்.

**“எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.”**

ஆம், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும் மனுக்குலத்திற்கு இந்த பொதுவான மரண சாபத்திலிருந்து விடுதலையும் அதை தொடர்ந்து “ஒவ்வொரு மனிதனும்” அல்லது தனிப்பட்ட மனிதர்கள் <u>தங்களுடைய சொந்த பாவத்திற்காக மரிப்பார்கள்.</u>

**இங்குள்ள “திராட்சைக்காய்கள்” பாவத்தையும், “பற்கள் கூசிப்போகுதல்” பாவத்தின் விளைவாக பெறும் மரணத்தையும் அடையாளப்படுத்துகிறது. (ரோமர் 6 : 23)**



# மூப்பர் – 10

இந்த “வார்த்தைகள்” தேவன் தீர்க்கதரிசி **எசேக்கியேல்** மூலம் பேசினவைகளாகும்.

**எசேக்கியேல் 21:26,27**

**“பாகையைக் கழற்று கிரீடத்தை எடுத்துப்போடு, அது இனி முன்போலிராது, தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன், அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும், அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.”**

ஆம், இந்த வார்த்தைகள் இஸ்ரயேலில் நிழலாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேவனுடைய இராஜ்யத்திற்கான ஆசீர்வாத காலம் முடிவுக்கு வந்ததை குறித்து எசேக்கியேலின் வார்த்தைகள் மூலமாக பேசப்பட்டதாகும். **(இஸ்ரயேலின் இராஜாக்கள் “கர்த்தருடைய சிங்காசனத்தில்” அமர்ந்தார்கள். -1 நாளாகமம் 29 : 39)**

இந்த தீர்க்கதரிசனம் “உரிமைக்காரரனானவருக்கு” அந்த வல்லமையும், அதிகாரமும் கொடுக்கப்படுவதாக சொல்லப்படுகிறது.

ஆம், இந்த தீர்க்கதரிசனம் தேவனுடைய நிழலான இராஜ்யம் இஸ்ரயேலிலிருந்து அகற்றப்பட்டு அந்த வல்லமை மற்றும் இராஜ்யம் இயேசுவினிடத்தில் அவருடைய இரண்டாம் வருகையில் கொடுக்கப்படுவதை குறித்து பேசுகிறது.



# மூப்பர் – 11

இது தீர்க்கதரிசி **தானியேல்** மூலம் பேசப்பட்ட தேவனுடைய வார்த்தைகளாகும்.

**தானியேல் 12 : 12**

**“ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்.”**

இந்த வார்த்தைகள் ஒரு தீர்க்கதரிசன நாளை குறித்து, தானியேல் பேசினவைகளாகும். அந்த நாள் பாக்கியமான நாளாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை குறித்து பின் வரும் வகுப்புகளில் நாம் விரிவாக காண்போம்.

இப்பொழுது, இதை குறித்து விவரமாக காணமுடியாத காரணம்,

**யோவான் 16 : 12**

**“இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.”**

ஆம், இந்த தீர்க்கதரிசனத்தை குறித்து இப்பொழுது ஆராய்வது ஏற்றகாலத்திற்கு முன்பு செய்கிற முயற்சியாக இருக்கும்.

ஆகையால், இந்த “மூப்பரை” பின் வரும் வகுப்பில் நாம் சந்திப்போம். இப்போதைக்கு இந்த தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு தொடர்புடையது என்று சொல்லுவது போதுமானதாக இருக்கும்.

## மூப்பர் – 12



இது தீர்க்கதரிசி **ஓசியா** மூலம் தேவன் பேசின வார்த்தைகளாகும்.

**ஓசியா 7 : 8, 11**

**“எப்பிராயீம் அந்நியஜனங்களோடே கலந்திருக்கிறான், எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம். எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான். அவனுக்குப் புத்தியில்லை. எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள், அசீரியனிடத்திற்கும் போகிறார்கள்.”**

இந்த வார்த்தைகள் எப்பிராயீமை குறித்து தீர்க்கதரிசி ஓசியா மூலமாக பேசப்பட்டது.

**எப்பிராயீம் யார் மற்றும் இந்த தீர்க்கதரிசனம் எதை குறிக்கிறது ?**

நாம் வாசிக்கிறபடி எப்பிராயீம் யோசேப்பின் இரண்டாவது குமாரன் என்று நாம் அறிவோம்.



**ஆதியாகமம் 48:13,14**

**"பின்பு, யோசேப்பு அவ்விருவரையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையினாலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும், மனாசேயைத் தன் இடதுகையினாலே இஸ்ரவேலின் வலது கைக்கு நேராகவும் விட்டான். அப்பொழுது இஸ்ரவேல், மனமறிய தன் வலதுகையை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும், தன் இடது கையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்தான்."**

ஆனால், இந்த தீர்க்கதரிசனம் தனிப்பட்ட முறையில் எப்பிராயீமை குறித்து பேசுவதில்லை என்பது நிச்சயம். யோசேப்பின் **இரண்டு குமாரர்களும் கிறிஸ்தவர்களில்** தெரிந்துகொள்ளப்பட்ட நிலைமையில் உள்ள **"இரு வகுப்பாரை" குறிக்கும்.** எப்படியென்று நாம் காண்போம்.

முதலாவது பிறந்த **மனாசே வெளிப்படுத்தல்** 7 : 6-ல் வாசிக்கிறபடி **சிறு மந்தையை குறிக்கிறார்.** இப்படியிருக்க, **எப்பிராயீம் திரள்கூட்ட வகுப்பாரை** குறிக்கவேண்டும்.

இவ்விதமாக, இந்த தீர்க்கதரிசனம் திரள் கூட்ட வகுப்பார் மற்றும் அதன் பக்குவமடையாத, அதேசமயம் ஒழுங்கில்லாத ஆவிக்குரிய வளர்ச்சியை குறிக்கும்-

**"திருப்பிப் போடாத அப்பம்"** என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வகுப்பார் வசனம் 11-ல், **"பேதையான புறா"** என்றும் சொல்லப்பட்டு அதன் மூலம் இவர்கள் "கன்னிகளாக" இருந்தாலும் **"புத்தியில்லாத கன்னிகளாக"- மத்தேயு 25:2,3 -ல்** அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.



மேலும், இவ்வகுப்பாரை குறித்து நாம் வாசிக்கையில்,

**ஓசியா 13 : 13**

**"பிரசவ ஸ்திரீயின் வேதனை அவனுக்கு வரும் அவன் விவேகமில்லாத பிள்ளை, பேறுகாலமட்டும் அவன் நிற்கவில்லை."**

ஆம், இது இந்த வகுப்பார் கடந்து செல்ல வேண்டிய மகா உபத்திரவத்தை குறித்தும், அதன் மூலம் உலக கறைகளிலிருந்து கழுவப்படுவதை குறித்தும் பேசுகிறது.

இவ்விதமாக, ஓசியாவின் மூலம் உரைக்கப்பட்ட இந்த "மூப்பர்" அல்லது தீர்க்கதரிசனம் **திரள்கூட்ட வகுப்பாரின்** நிலையை சித்தரிக்கிறது.

இந்த "மூப்பர்" யோவானிடம் பேசுவதையும் நாம் வாசிக்கிறோம்,

**வெளிப்படுத்தல் 7 : 13 – 14**

**"அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி, வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார் ? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான் ஆண்டவனே அது உமக்கே தெரியும்**

**என்றேன். அப்பொழுது அவன் இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்."**



## மூப்பர் – 13

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **யோவேலின்** மூலம் பேசினவைகளாகும்.

**யோவேல் 2:28**

**"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்."**

இந்த வார்த்தைகள் தீர்க்கதரிசி யோவேல் மூலமாக பேசப்பட்டு ஆயிரவருட அரசாட்சியில் அனைவர்மேலும் ஊற்றப்படும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை (யோவான் 15:26) குறித்து பேசுகிறது.

இது வசனம் 29-ல் சொல்லப்பட்டுள்ள - "ஊழியக்காரர்மேலும், ஊழியக்காரிகள் மேலும்" ஊற்றப்படும் சுவிசேஷ யுகத்தின் அபிஷேகத்திலிருந்து மாறுபடுகிறது.

இவ்விதமாக, இரண்டு வெவ்வேறு யுகங்களிலும் ஊற்றப்படும் தேவனுடைய பரிசுத்த ஆவி பின் வரும் வசனத்தில் மிக அருமையாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

**நியாயாதிபதிகள் 6:37-40**

**"இதோ, நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன்; பனி தோலின்மேல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன் என்றான். அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலமே எழுந்திருந்து, தோலைக்கசக்கி, அதிலிருந்த பனிநீரை ஒரு கிண்ணம் நிறையப்பிழிந்தான். அப்பொழுது கிதியோன்**

**தேவனை நோக்கி: நான் இன்னும் ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என் மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒரேவிசை சோதனைபண்ணட்டும்; தோல்மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான். அப்படியே தேவன் அன்று ராத்திரி செய்தார்; தோல்மாத்திரம் காய்ந்திருந்து, பூமியெங்கும் பனி பெய்திருந்தது."**

ஆம், இவை இரண்டும் கிதியோன் தன் பட்சமாய் தேவன் இருப்பதை உறுதிப்படுத்த அவரிடம் வேண்டிக்கேட்ட வெளிப்படையான அடையாளங்களாகும்.

ஆனால், நாம் கற்றுக் கொள்ளவேண்டிய மிக முக்கியமான பாடம் இருக்கிறது.

அதை இப்பொழுது பார்ப்போம்.

இங்கு **பனி**யானது தேவனுடைய **பரிசுத்த ஆவியை** சித்தரிக்கிறது.

**சங்கீதம் 133:2,3**

**"அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்."**



இவ்விதமாக, அந்த இரண்டு அடையாளங்களும் தேவனுடைய தெய்வீக திட்டத்தில் நடைபெறும் பரிசுத்த ஆவியின் பொழிதலை குறிக்கிறது.

**“பனி தோலின்மேல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்து”**

**இது சிறிய வகுப்பாராகிய - சபை மீது சுவிசேஷ யுகத்தில் பொழியப்படும் தேவனுடைய பரிசுத்த ஆவியாகும்.**

இது (”ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்” - யோவேல் 2:29 - என்று சொல்லப்பட்டிருக்கிறது...)



**“தோல்மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும்”**

**இது வரப்போகிற ஆயிர வருட ஆட்சியில் மாம்சமான யாவர்மேலும் பொழியப்படும் தேவனுடைய பரிசுத்த ஆவியாகும்.**

இங்கு **“காய்ந்த”** நிலையில் இருக்கும் தோலானது மனுக்குலத்தில் தேவனுடைய **பரிசுத்த ஆவியின் பொழிதலை மனதார எதிர்க்கும் சிறிய கூட்டமாகிய துன்மார்க்கரை** குறிக்கும் என்று நாம் வாசிக்கிறோம்.

**ஏசாயா 26 : 10**

**“துன்மார்க்கனுக்குத் தயைசெய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான் நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்.”**

**ஆம், இவர்கள் இரண்டாம் மரணத்தை அடைகிற ஜனங்கள் ஆவர்.**





# மூப்பர் – 14

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **ஆமோஸ்** மூலம் பேசினவைகளாகும்.

**ஆமோஸ் 9 : 13**

**"இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்."**



இந்த வார்த்தைகள் **"உழுகிறவன்'** மற்றும் **"அறுக்கிறவனைப்"** பற்றி தீர்க்கதரிசி ஆமோஸ் மூலம் பேசப்பட்டவைகளாகும்.

## இது எதை குறிக்கும் ?



**இங்கு "அறுக்கிறவன்" என்பது சுவிசேஷ யுகத்தின் அறுவடை வேலையை குறிக்கும். அது <u>சத்தியத்திற்காக வாஞ்சையாயிருந்து இயேசுவை பின்பற்றும்</u> உண்மை கிறிஸ்தவர்களை அவரிடம் சேர்க்கிற வேலையாகும்.**

இங்கு **"உழுகிறவன்"** என்பது **"நிலம்"** என்ற உலகத்தை ஆயத்தப்படுத்தும் வேலையை குறிக்கும்.

**மத்தேயு 13 : 38 - "நிலம் உலகம்."**



இந்த **"உழுதல்"** அல்லது தேவனுடைய வார்த்தையாகிய விதையை பெற்றுக்கொள்ள **உலக ஜனங்களின் மனதை ஆயத்தப்படுத்துவது**, இயேசு கூறுகிறபடி "மகா உபத்திரவ காலத்தின்" வேலையாகும்.

**மத்தேயு 24 : 21**

**"ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்."**

இங்கு "உழுகிறவன் அறுக்கிறவனை தொடர்ந்து பிடிப்பது", தேவனுடைய தெய்வீக திட்டத்தில் ஒரு வேளை மற்றொன்றை எந்த தாமதமுமின்றி தொடர்வதை குறிக்கும்.

**"பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறது"**

என்பது NIV மொழிபெயர்ப்பில் "புதிய திராட்சரசம்" என்று உள்ளது. இது அந்த நாட்களில் அறிவியல், இயற்கை, தொழில் நுட்பம், வேதியியல், போன்ற பல்வேறு பாடங்களை குறித்த சத்தியமானது ஒவ்வொன்றாக (வடிகிறது) "பர்வதங்களில்" – அனைத்து உலக தேசங்களிலும் வெளிப்படுவதை குறிக்கும்.



# மூப்பர் – 15

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **ஒபதியா** மூலம் பேசினவைகளாகும்

**ஒபதியா 21**

**"ஏசாவின் பர்வதத்தை நியாயந்தீர்ப்பதற்காக இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள். அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்."**

இங்கு ஒபதியா தீர்க்கதரிசி – "இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வருவதை" குறித்து பேசுகிறார்.

இது இரட்சகர்களாகிய – இயேசு மற்றும் அவருடைய மகிமையடைந்த சபையானது கண்ணுக்கு தெரிகிற தேவனுடைய இராஜ்யத்தின் பாகம் ஸ்தாபிக்கப்படுவதை குறிக்கும்.

ஆம், தேவனுடைய இராஜ்யத்தில் "கண்ணுக்கு தெரிகிற பாகத்திற்கு" சீயோன் என்ற நாமம் குறிப்பிடப்படுகிறது.

**"...நீதி வாசம் செய்யும் புதிய வானங்களும்..." (II பேதுரு 3:13)**

இங்கு "இரட்சகர்கள்" என்று பன்மையில் சொல்லப்படுவது மகிமையடைந்த நிலையில் உள்ள தலை மற்றும் சரீர அங்கங்களாகிய **1,44,000** பேர் – கிறிஸ்துவை குறிக்கும்.



# மூப்பர் – 16

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **யோனா** மூலம் பேசினவைகளாகும்

**யோனா 4 : 10, 11**

**"அதற்குக் கர்த்தர் – நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு**

**இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்."**

இந்த "வார்த்தைகள்" தீர்க்கதரிசி யோனா மூலம் பேசப்பட்டு "நினிவே" பட்டணத்தார் மீது தேவன் காண்பித்த இரக்கத்தை குறித்து பேசுகிற வார்த்தைகளாகும்.

**"நினிவே" குறித்த இந்த சம்பவம் எதை குறிக்கிறது ?**

இதை நினிவே பட்டணத்தின் நிலையை குறித்து பேசப்பட்டுள்ள வார்த்தைகளின் மூலம் நாம் உணரலாம்

**"வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத"**

இங்கு **"வலது கை"** என்பது **சத்தியத்தையும், "இடது கை"** என்பது **அசத்தியத்தையும்** குறிக்கும். அப்படியென்றால், சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் உள்ள ஜனங்கள் யார்?

**ஆம், இது உலக மனுக்குலத்தையே குறிக்கும்.**



உலகத்தின் இந்த நிலையை குறித்து நாம் வாசிக்கையில்,

**ஏசாயா 60 : 2**

**"இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும், ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார், அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்."**

உண்மையில், உலகமானது தேவனுடைய சத்தியம் அல்லது வெளிச்சம் பற்றி அறியாத இருளடைந்த நிலையில் உள்ளது.

இது சாத்தானுடைய வேலையாக இருப்பதை நாம் வாசிக்கிறோம்,

**2 கொரிந்தியர் 4 : 4 - "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்."**

**இதை சாத்தான் எவ்வாறு செய்திருக்க முடியும் ?**

இதற்கான பதிலை நாம் வாசிக்கையில்,

**ஏசாயா 5 : 20**

**"தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ"**

ஆம், உலகத்தை குழப்பத்தின் மூலம் குருடாக்கி, அவர்கள் அசத்தியத்தை சத்தியம் என்றும், சத்தியத்தை அசத்தியம் என்றும் நம்பும்படி சாத்தான் செய்துள்ளான். ஆனால், நினிவே குறித்து தேவன் பேசியுள்ள பிரகாரம் அவர் இரக்கமுள்ளவராக இருந்து ஏற்ற சமயத்தில் உலக மனுக்குலத்தை மீட்கும் இரட்சிப்பின் திட்டத்தை குறித்து பேசியுள்ளார்.

## மூப்பர் – 17



இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **மீகா** மூலம் பேசினவைகளாகும்

**மீகா 4:1,2**

**"ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார் நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்"**

இந்த வார்த்தைகள் மகிமையான இராஜ்யத்தையும் அதில் தாமாக முன் வந்து "நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்" என்று சொல்லும் மனுக்குலத்தையும் குறித்து மீகா பேசினவைகளாகும்.

**மேலும், இது இவ்வுலக ஜனங்கள் மற்றும் தேசங்களின் விருப்பம் மற்றும் கீழ்ப்படிதலை குறித்து பேசுகிறது.**





# மூப்பர் – 18

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **நாகூம்** மூலம் பேசுவதை வாசிக்கிறோம்.

**நாகூம் 1 : 15**

**"இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது, யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி, உன் பொருத்தனைகளைச் செலுத்து, துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்."**

**இங்கு "சுவிசேஷகனுடைய பாதங்கள்" எதை குறிக்கும் ?**

**"சுவிசேஷகன்"** என்பது **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும்,** **"பாதங்கள்"** என்பது **அவருடைய சரீர அங்கங்களையும்** – முக்கியமாக "சபையில்" முடிவு காலத்தில் வாழ்ந்து, சத்தியத்தை அறிவிக்கும் கடைசி அங்கங்களை அடையாளப்படுத்துகிறது.

**இவர்கள் எல்லா "மலைகளிலும்" அல்லது உலகத்தின் தேசங்களிலும் இருந்து "இராஜ்யத்தின் சுவிசேஷத்தை" – "நற்செய்தியை" அறிவிப்பார்கள்.**



# மூப்பர் – 19

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசி **ஆபகூக்** மூலம் பேசினதை வாசிக்கிறோம்.

**ஆபகூக் 2 : 14**

**"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல் பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."**



இந்த வார்த்தைகள் பூமியை **“கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால்”** நிரப்புவதை பற்றி தீர்க்கதரிசி ஆபகூக் பேசினவைகளாகும்.

இது முழு உலகமும் வேதத்தை பற்றின அறிவினால் நிரப்பப்படுவதற்கு ஆதார வசனமாகும். இருந்தாலும், இந்த வார்த்தைகளுக்கு ஒரு ஆழமான பொருளும் உள்ளது.

**இங்கு “கர்த்தருடைய மகிமை” என்பது எதை குறிக்கும் ?**

இதை குறித்து வாசிக்கையில்

**யாத்திராகமம் 33 : 18, 22**

**“அப்பொழுது அவன் - உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான்.” “என் மகிமை கடந்துபோகும் போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என்கரத்தினால் உன்னை மூடுவேன்.”**

ஆம், மோசே “கர்த்தருடைய மகிமையை” அல்லது அவருடைய மறுபக்கத்தை கண்டார். பின்னாளில் மோசேவை போன்று அநேகர் “கர்த்தருடைய மகிமையை” கண்டதாக வாசிக்கிறோம்.

**யோவான் 1 : 14**

**“அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார், அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.”**

ஆம், மோசே கண்ட “கர்த்தருடைய மகிமை” நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆவார்.

இவ்விதமாக, பிதாவினிடத்தில் சேருவதற்கான “வழியாகிய” இயேசுவை பற்றின உண்மையான ஞானத்தால் இவ்வுலகம் முதலில் நிரப்பப்பட்டு பின்பு – “ஒன்றான மெய்தேவனை” அறிந்து கொள்ள வழி நடத்தப்படுவார்கள்.

ஏனென்றால், இயேசு மூலமாகவே ஒருவர் தேவனிடத்தில் சேர முடியும் என்று வாசிக்கிறோம்.

**யோவான் 1 : 18 - “தேவனை ஒருவனும் ஒருக்காலுங்கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.”**

**இது எவ்விதமாக நிறைவேறும் ?**

இன்று நாம் அநேக விதமான செய்தி ஊடகங்களை காண்கிறோம் **தொலைக்காட்சி, படங்கள், வானொலி, புத்தகங்கள், இணைய தளம், டி.வி.டி. வி.சி.டி.** மற்றும் பல. ஆம், உண்மையில், அந்த ஆசீர்வாதமான நாட்களுக்கு வெகு அருகில் நாம் இருக்கிறோம்.

## மூப்பர் – 20



இந்த “வார்த்தைகள்” தேவன் தீர்க்கதரிசி **செப்பனியா** மூலம் பேசினதை வாசிக்கிறோம்.

**செப்பனியா 3:8,9**

**“ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் சினமாகிய உக்கிரகோபத்தையெல்லாம் அவர்கள் மேல் சொரியும்படி ஜாதிகளைச்**

**சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன், பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும், அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்."**

இந்த வார்த்தைகள் தேவனுடைய "பழிவாங்குதல்" மற்றும் "கோபத்தின் நாளில்" பூமியெல்லாம் எரிச்சலின் அக்கினியினால் அழிவதை அல்லது அனைத்து அமைப்புகளையும் அழிவுக்குள்ளாகும் நியாயத்தீர்ப்பை குறித்து செப்பனியா பேசினவைகளாகும்.

இதை தொடர்ந்து சத்தியம் மற்றும் ஆசீர்வாதம் அடங்கிய தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று வாசிக்கிறோம்.

**"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்."**



**இந்த "சுத்தமான" பாஷை என்பது அனைவரும் பெற்றுக்கொள்ளும் சத்திய பாஷையாகும்.**

சிலர் இந்த "சுத்த பாஷையை" குறித்து, அது பாபேல் கோபுரத்திற்கு முந்தைய நாட்களில் இருந்த ஒரே உலக பாஷையாக இருக்கும் என்று கருதுகின்றனர்.

**இது உண்மையா ?**

இது உண்மை என்று வசனங்கள் போதிப்பதில்லை,

**செப்பனியா 2 : 11**

**"கர்த்தர் அவர்கள்மேல் கெடியாயிருப்பார். பூமியிலுள்ள தேவர்களையெல்லாம் மெலிந்துபோகப்பண்ணுவார், அப்பொழுது தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்துகொள்வார்கள்."**

பார்த்தீர்களா, இங்கு நாம் காண்பது என்னவெனில் பாஷைகள் மாறாமலிருந்து அனைவரும் தேவனை தங்களுடைய "ஸ்தானத்திலிருந்து" சொந்த பாஷையில் தொழுது கொள்வதை காண்கிறோம்.

**இது அருமையானதும், ஆச்சர்யமுமானதாக இருக்கும்.**

## மூப்பர் – 21



இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசியாகிய **ஆகாய்** மூலம் பேசினதாக வாசிக்கிறோம்.

**ஆகாய் 2 : 6, 7**

**"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார், இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."**

இந்த தீர்க்கதரிசனம் மற்றும் சாட்சியானது **பொய்யை சத்தியமானது அழிக்க துவங்கும்** பொழுது மற்றும் **இருளை வெளிச்சமானது மறைய செய்யும்** பொழுது நிறைவேறும் நீதியான நியாயத்தீர்ப்பாகிய “அசைவை” குறித்து பேசுகிறது.

இந்த “அசைவானது” பின் வருபவைகள் மேல் சம்பவிக்கும் என்று வாசிக்கிறோம்.




**இது கண்ணுக்கு தெரியாத சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் ஆவிக்குரிய அரசாட்சியை அடையாளப்படுத்துகிறது.**

**“பூமி”**



**இது கண்ணுக்கு தெரியும் சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் மாம்சீக (அ) பூமிக்குரிய அரசாட்சியை அடையாளப் படுத்துகிறது.**










## “சமுத்திரம்”

**இது நாகரீகமற்ற சமுதாயத்தை – ஜனங்களை அடையாளப்படுத்துகிறது. (“துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப் போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது.” - ஏசாயா 57 : 20)**



## “வெட்டாந்தரை”

**இது நாகரீகமான சமுதாயத்தை – ஜனங்களை அடையாளப் படுத்துகிறது.**

மேலும், இந்த முடிவை தொடர்ந்து “தேசத்தால் விரும்பப்பட்டது” வரும்.

ஆம், அது இயேசு மற்றும் இரட்சிப்பு, மகிழ்ச்சி, சந்தோஷம் மற்றும் சமாதானமான அவருடைய இராஜ்யமாகும் இதுவே, சகல ஜனங்களாலும் விரும்பப்பட்டது.

ஆனால், இதை நித்திய காலத்திற்கும் ஏற்படுத்துகிறவருடைய நாமம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்பதை

அநேகர் அறியாமல் இருக்கிறார்கள். ஏற்றகாலத்தில் அதை அனைவரும் உணர்வர்.

# மூப்பர் – 22



இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசியாகிய **சகரியா** மூலம் பேசினவைகளாகும்.

**சகரியா 6 : 12,13**

**"அவனோடே சொல்லவேண்டியது – சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, ஒரு புருஷன் அவருடைய நாமம் கிளை என்னப்படும், அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பிக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார், அவர் மகிமைபொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியராயும் இருப்பார், இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும்."**

**இங்கு "கிளை" என்ற வார்த்தை எதை குறிக்கிறது ?**



இதற்கான பதிலை பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்,

**ஏசாயா 11 : 1**

**"ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்"**

ஆம், இது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது.

ஆம், இது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. ஆனால், இயேசு "கிளை" என்று குறிப்பிடப்படுவதன் காரணம் என்ன ?

இங்கு குறிப்பிடப்படுவது, முழு மனுக்குலத்திற்கும் புதிதான ஜீவனை தரக்கூடியவராக மாறின

"மனுஷனாகிய இயேசு" (1தீமோத்தேயு 2 : 5) ஆவார்.

இயேசு மனிதனாக மாறி அதன் மூலம் மரித்த சந்ததிக்கு ஜீவன் அளித்தார்.

ஆம், அவரே ஜீவனளிக்கும் "கிளையாக" இருந்து மனுக்குலத்திற்கு ஜீவனை தருவார். இந்த தீர்க்கதரிசனம் இயேசு இராஜாவாகவும் ஆசாரியாராகவும் தம்முடைய சிங்காசனத்தில் பெற்றிருக்கும் மகிமையை குறித்து சொல்கிறது.

இராஜ்யத்தில் இயேசுவின் இந்த மகிமையான ஸ்தானமானது பழைய ஏற்பாட்டில் மெல்கிசெதேக்கு இராஜா மூலம் நிழலாக கூறப்பட்டுள்ளது. இவர் ஆபிரகாமை சந்தித்து தசமபாகத்தை பெற்றுகொண்டதாக வாசிக்கிறோம்.

**ஆதியாகமம் 14:18 - அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து..."**



## மூப்பர் – 23

இந்த "வார்த்தைகள்" தேவன் தீர்க்கதரிசியாகிய **மல்கியா** மூலம் பேசினவைகளாகும்.

**மல்கியா 3 : 17**

**"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்."**

இந்த வார்த்தைகள் "விலையுர்ந்த பொக்கிஷமாகிய" – **தேவனுடைய பரிசுத்தவான்கள் – 1,44,000** எண்ணிக்கையுடைய – **"அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருந்து"** தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய – மகிமையடைந்த இயேசு கிறிஸ்துவின் சபையை கூட்டிச்சேர்ப்பது குறித்து மல்கியா பேசினவைகளாகும்.

இந்த தீர்க்கதரிசனம் "நான் அவர்களை கடாட்சிப்பேன்" என்று சொல்கிறதை காண்கிறோம்.

இது எதை குறிக்கும் ?



இது உண்மையுள்ள சபை வகுப்பாரில் – இந்த பூமியின் மேல் வரவிருக்கிற **"மகா உபத்திரவத்திலிருந்து" (மத்தேயு 24 : 21) தப்பிக்கும் மாம்சத்தில் உள்ள கடைசி அங்கங்களை குறிக்கும்.**

இது பின் வரும் வசந்த்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

**லூக்கா 21 : 36**

**"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்."**

ஆம், உண்மையுள்ளவர்கள் அதிலிருந்து தப்பிக்க பாத்திரவாங்களாக இருக்கிறார்கள்.

நாம் பழைய ஏற்பாட்டின் முடிவுக்கு வந்திருந்தாலும், இருபத்து நான்கு மூப்பர்களில் இன்னும் ஒரு "மூப்பர்" அல்லது தீர்க்கதரிசனம் மீதம் இருப்பதை காண்கிறோம்.

தேவனுடைய கடைசி தீர்க்கதரிசனத்தை உடைய அந்த கடைசி தீர்க்கதரிசி யாராக இருக்கக்கூடும் ?

அதை குறித்து நாம் பார்க்கையில்....



# மூப்பர் – 24

**யோவான் 1 : 29**

**"மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு, இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி..."**



இந்த "வார்த்தைகள்" **தேவனுடைய கடைசி தீர்க்கதரிசியாகிய (மத்தேயு 11:13) யோவான் ஸ்நானகன்** உலகத்தின் பாவங்களுக்காக தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவை பற்றி பேசினவைகளாகும்.

இவரே ஆதாம் மற்றும் முழு மனுக்குலத்திற்குமான விலை கிரயமாகிய – தேவ ஆட்டுக்குட்டியாவார். அனைவர் மேலும்

பாவத்தினால் வந்த மரண சாபம் அழிக்கப்பட்டு ஜீவனுக்கேதுவான புதிய நம்பிக்கை உலகத்திற்கு வந்ததை நாம் வாசிக்கிறோம்.

**"கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."**
**(1கொரிந்தியர் 15 : 22)**

## இவர்களே அந்த "மூப்பர்கள்" – மொத்தமாக இருபத்துநான்கு பேர் ஆவர்.

இவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் தேவனுடைய மகிமைக்காக நிறைவேற்றப்பட்டு உணரப்படுவார்கள். இந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் தங்களுடைய ஒளியை இராஜ்யத்தில் பிரகாசிக்கப்பண்ணும்.

இதை பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்,

**ஏசாயா 30 : 26**

**"குணமாக்கும் நாளிலே (ஆயிர வருட ஆட்சி) சந்திரனுடைய வெளிச்சம் (பழைய ஏற்பாட்டின் சத்தியம்) சூரியனுடைய வெளிச்சத்தைப்போலவும் (சுவிசேஷத்தின் ஒளி), சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் (வெளிப்படுத்தப்படும்) இருக்கும்."**

ஆம், உண்மையில் இந்த "மூப்பர்கள்" உலகத்திற்கு வெளிப்படவேண்டிய காலம் வருகிறது.

இந்த மூப்பர்களை நாம் சந்தித்தவர்களாக இருக்கும் பொழுது, இப்பொழுது இவர்களில் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் பேசுகிற சிலரை நாம் அடையாளம் காணலாம்.

அந்த வசனங்களை பார்க்கையில்,

**வெளிப்படுத்தல் 5:5**

**"அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி – நீ அழவேண்டாம், இதோ, யூதா கோத்திரத்துச்சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்."**

இந்த "மூப்பர்" இங்கு **இரண்டாவது மூப்பராகிய – யாக்கோபின் மூலம் பேசப்பட்ட தீர்க்கதரிசன** வார்த்தைகளாகும். மேலும்,

**வெளிப்படுத்தல் 7:13**

**"அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி வெள்ளை அங்கிகளை தரித்திருக்கிற இவர்கள் யார் ? எங்கே இருந்து வந்தார்கள் ? என்று கேட்டான்."**

இந்த "மூப்பர்" இங்கு 12 வது **மூப்பராகிய ஓசியா பேசப்பட்ட தீர்க்கதரிசன** வார்த்தைகளாகும். நாம் இப்பொழுது இந்த இருபத்துநான்கு மூப்பர்களை பற்றி வெளிப்படுத்தல் புத்தகத்தில் பதிவாகியிருக்கிற வேறொரு முக்கியமான விஷயத்தை கவனிக்கலாம்.

**வெளிப்படுத்தல் 5:14**

**"அதற்கு நான்கு ஜீவன்களும், ஆமென் என்று சொல்லின. இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்."**

**இது எதை குறிக்கும் ?**

இங்கு, ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் நிறைவேற்றப்படும் தேவனுடைய தெய்வீக திட்டத்தை குறித்து அடையாளமாக பேசப்பட்டுள்ளது. மேலும், **அந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் பொழுது தேவனை மகிமைப்படுத்தும் விதத்தை** குறித்தும் சொல்லப்பட்டுள்ளது –

**வெளிப்படுத்தல் 4:10**

**"இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து"**

ஆம், இங்கு "கிரீடங்கள்" மகிமையை குறிக்கிறது, மேலும், எல்லா மகிமையும் "சதா காலங்களிலும் உயிரோடிருக்கிற" பிதாவாகிய தேவனுக்கு ஏறெடுக்கப்படுவதை நாம் கவனிக்கறோம்.

நாம் முடிக்கும் முன்பு இந்த "மூப்பர்களை" குறித்த மற்றொரு காரியத்தை பார்ப்போம்.

**வெளிப்படுத்தல் 5:8**

**“அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கின போது, அந்த நான்கு ஜீவன்களும், இருப்த்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து”**

இது தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் தேவனை மகிமைப்படுத்துவதை மாத்திரம் குறிப்பிடாமல்..... மேலும், தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுகிறவராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் குறிப்பிடுகிறது. ஏனென்றால், அது தேவ சித்தமாக இருப்பதை நாம் வாசிக்கிறோம்.

**யோவான் 5 : 23**

**“குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும்கனம் பண்ணுதவனாயிருக்கிறான்.”**

ஆம், இதுவே தேவ ஏற்பாடும், சித்தமுமாக இருக்கிறது.

இறுதியாக.....பின் வரும் காரியத்தின் மூலம் பாடத்தை நாம் முடிப்போம்

**வெளிப்படுத்தல் 4:8**

**“அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும்...”**

நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறபடி இந்த “நான்கு ஜீவன்களும்” தேவனுடைய நான்கு பிரதானமான குணலட்சணங்களை குறிக்கிறது.

**இப்பொழுது, இங்கு சொல்லப்படிருக்கும் “ஆறு சிறகுகள்” ஒவ்வொன்றும் எதை குறிக்கும் ?**

பொதுவாக, “சிறகுகள்” அசைவதற்கு பயன்படுவது போல, இங்கு அவைகள் தேவனுடைய தெய்வீக திட்டம் செயலாற்றப்பட்டு நிறைவேறும் பொழுது வெளிப்படும் தேவனுடைய குணலட்சணங்களை குறிக்கிறது.

ஒருவர் இந்த சிறகுகளை கூட்டிப்பார்க்கையில்.....மொத்தமாக

**6 X 4 =24** .....சிறகுகள் இருப்பதை காண்கிறோம்.

ஆம், இந்த 24 சிறகுகள் தேவனுடைய வார்த்தைகளாகிய –

**இருபத்துநான்கு மூப்பர்கள் மூலம் வெளிப்படுகிற தெய்வீக திட்டத்தை குறிக்கிறது.**

ஒவ்வொரு "ஜீவனிலும்" உள்ள ஆறு "சிறகுகள்" அல்லது குணலட்சணங்கள் இருபத்துநான்கு தீர்க்கதரிசனங்கள் மேலும்......தேவனுடைய நான்கு குணலட்சணங்களின் அடிப்படையில் அவ்வாறாக கீழே காண்கிறபடி பிரிக்கப்படுவதை குறிக்கிறது.

**நீதி** – ஆறு "மூப்பர்கள்" அல்லது தீர்க்கதரிசனங்கள் தேவனுடைய நீதியை வெளிப்படுத்துகிறது.

**வல்லமை** – ஆறு "மூப்பர்கள்" அல்லது தீர்க்கதரிசனங்கள் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துகிறது.

**அன்பு** – ஆறு "மூப்பர்கள்" அல்லது தீர்க்கதரிசனங்கள் தேவனுடைய அன்பை வெளிப்படுத்துகிறது.


**ஞானம்** – ஆறு "மூப்பர்கள்" அல்லது தீர்க்கதரிசனங்கள் தேவனுடைய ஞானத்தை வெளிப்படுத்துகிறது.

**இவைகள் ஒவ்வொன்றும் மிக சரியாக எந்தெந்த குணலட்சணங்களை குறிக்கிறது ?**

**அன்பான சகோதர சகோதரிகளே, அது நாம் ஆராய்ந்து பார்த்து கற்றுக்கொள்ள வேண்டிய கேள்வியாக இருக்கிறது.**

**...ஆமென்...**

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com